**பாதஹேவாஹட்ட பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பாதஹேவாஹட்ட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 62 காணிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள ரூபா 50,000 தொகை முற்பண கொடுப்பனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கையில் நானாவித வைப்புக் கணக்கில் செலவு மீதியொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,760,631 ஆக இருந்ததுடன், பயன்பாட்டு பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,626,923 ஆக இருந்தமையால் ரூபா 291,362 தொகையான வேறுபாடு கண்டறியப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 85,862,288 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,821,869 ஆக இருந்தது. 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,123,508

ஆக இருந்ததுடன் 2018 மே 11 இல் உள்ளவாறு ரூபா 79,894,013 தொகையான மீதியொன்று மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 23,660,846 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளில் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,000 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,563.204 ,ஆக இருந்தது. 2018 மே 11 இல் உள்ளவாறு ரூபா 8,971,064 தொகையான மீதியொன்று மேலும் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 30,963,152 தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவு | | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா அதிகார சபையில் பதிவுசெய்துள்ள 10 ஹொட்டெல்களின் வருமானத்தின் பிரகாரம் 01 சதவீத அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | | |
| (i) 59, 61 மற்றும் 67 ஆம் விதிகள் | | சபை அதிகாரப் பிரதேசத்தில் கைத்தொழில், வியாபார மற்றும் தொழில் இடங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் அதற்காக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 218 | | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடொன்றை மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | 407,220 | தற்காலிக வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வைப்புக்களை |

| | |
|---|---|
| 571(3) | சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2012-2016 காலப்பகுதிக்காக 43 சந்தர்ப்பங்களுக்குரிய வைப்புக்கள் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆரணயாளரின் சுற்றறிக்கையின் 05(1) | குறைந்தது 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை கடைகளை மதிப்பீடு செய்து வாடகை திருத்தம் செய்து சபைக்கு வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2014 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கலஹா மற்றும் தெல்தோட்டையில் அமைந்துள்ள கடைகளிலிருந்து மீளாய்வாண்டிற்காக வாடகை அறவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,037,388 ஆகக் இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 33,941,501 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 11,354,482 | 10,061,875 | 8,466,490 | 22,728,124 | 3,253,822 | 10,030,837 | 6,699,858 | 21,023,046 |
| (ii) | வாடகை | 3,729,356 | 3,921,109 | 4,315,015 | 880,610 | 4,523,935 | 4,256,548 | 3,487,853 | 1,160,531 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 5,333,250 | 2,404,587 | 2,404,587 | -- | 3,082,855 | 2,416,703 | 2,416,703 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 29,099,540 | 28,007,204 | 13,758,995 | 50,296,617 | 34,550,347 | 30,688,304 | 14,835,844 | 36,483,774 |
| | மொத்தம் | 49,516,628 | 44,394,775 | 28,945,087 | 73,905,351 | 45,410,959 | 47,392,392 | 27,440,258 | 58,667,351 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

திரட்டிய வருமான மூலங்களில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை ரூபா 58,667,351 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அப்பெறுமதி ரூபா 73,905,351 ஆக இருந்தமையால் நிலுவை வருமானத்தின் அதிகரிப்பு 26 சதவீதமாக இருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரிகளும்

(அ) வீதவரி

2017 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 5,635,445 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பட்டியலிடல் ரூபா 2,634,360 ஆக இருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவையிலும் பட்டியலிடலில் இருந்தும் முறையே ரூபா 1,283,099 மற்றும் ரூபா 1,859,942 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. இது 23 சதவீதமாகவும் 71 சதவீதமாகவும் இருந்தன. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,126,764 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) ஏக்கர் வரி

2017 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் மீதி ரூபா 1,156,129 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பட்டியலிடல் ரூபா 50,981 ஆக இருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவையிலிருந்து எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும் பட்டியலிடலில் இருந்து ரூபா 205 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வருமான அறவீடு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

2017 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 430,696 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் பட்டியலிடல் ரூபா 1,634,063 ஆக இருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவையிலும் பட்டியலிடலில் இருந்து முறையே ரூபா 69,870 மற்றும் ரூபா 1,256,203 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. இது 16 சதவீதமாகவும் 77 சதவீதமாகவும் இருந்தன. 2017

திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 738,686 ஆன நிலுவை கடை வாடகை மீதியொன்று காணப்பட்டது. 2018 மே 11 இல் உள்ளவாறு ரூபா 320,804 தொகையான மீதியொன்று மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2017 நவம்பர் 24 ஆந் திகதிஎழுமாறாக 28 வியாபார நிலையங்களை பரீட்சித்த போது அதில் 20 வியாபாரங்கள் மீளாய்வாண்டிற்காக அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 930,331 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 47,380,986 ஆன முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்

(அ) 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 12,806 ஆன முற்பண மீதியொன்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாகன திருத்தமொன்றிற்காக மாகாண வீதி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 361,694 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1985 ஆகஸ்ட் மாதம் திகதியற்ற ரூபா 125 ஆன மாத வாடகை அடிப்படையில் தலாதுஓய, குருதெனியா வீதியில் குடியிருக்கும் நபரொருவருக்கு சில்லறை வியாபாரத்திற்காக குத்தகை அடிப்படையில் 03 ஆம் இலக்க கடையை வழங்கி ரூபா 227,180 ஆன கடை வாடகை கொடுப்பனவு செய்யாத காரணத்தினால் 2014 ஆம் ஆண்டு உடன்படிக்கை நிறைவு செய்யப்பட்டு முத்திரையிடப்பட்டிருந்தது. இச்செயற்பாட்டை தீர்வு செய்யாமல் மூடப்பட்டிருந்த அக்கடை முன்னால் தற்காலிகமாக தகரங்களை மேவுகையாக இட்டு விற்பனை கூடமொன்றை நடாத்திச் செல்ல வேறு நபருக்கு பிரதேச சபை முறையற்ற விதத்தில் இடவசதிகளை வழங்கியிருந்தது. 1985 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கியிருந்த கடை அமைந்துள்ள காணி தொடர்பாக சபைக்கு சட்டரீதியான உரித்தை உறுதிப்படுத்துவதற்கு கூடிய உறுதியொன்று அல்லது கையளிப்பு கட்டளையொன்று சபையிடம் காணப்படவில்லை.

### 3.2 மனித வள முகாமைத்துவம்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கைக்கு இடையே 48 பதவிகளில் வெற்றிடங்களும் 01 மிகை பதவியும் காணப்பட்டன.

(ஆ) வருமான பரிசோதகரொருவர் மீளாய்வாண்டின் பெப்ரவரி முதல் ஒக்தோபர் வரையான காலப்பகுதிக்குரிய முன்னேற்றத் திட்டங்களையும் செய்யப்பட்ட வேலைக் குறிப்புக்கள் என்பவற்றையும் வழங்கியிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை வீதவரி புததாக மதிப்பீடு செய்து வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் சபையால் 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டிலும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) தெல்தொட்டை பொது வியாபாரச் சந்தையின் 12 கடைகள் குத்தகை உடன்படிக்கையொன்று இல்லாமல் 2008 ஆம் ஆண்டு முதல் வெளித்தரப்பினருக்கு வியாபார நடவடிக்கைகளுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 14 கடைகளின் உடன்படிக்கைகளில் தலைவர் அல்லது செயலாளர் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 78(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் பொதுமக்களின் சுகாதார அதிகாரியாக இருந்த போதிலும் 3,000 நபர்களுக்கு நீர் வழங்கல் வழங்கப்பட்டிருந்த 07 நீர் முன்மொழிவுகளிலிருந்து நீர் வடிகட்டப்படாமலும் சுத்திகரிக்கப்படாமலும் குளோரின் மாத்திரம் இட்டு நீர் வழங்கப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வாகனப் பயன்பாடு**

சபையின் கெப் வண்டி 2015 மே 14 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு திருத்த வேலைகளுக்காக ரூபா 103,188 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 24 ஆந் திகதி வரையிலும் இது நி.பி 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டின் போது ரூபா 84,537,779 ஆன மூலதன செலவினத்தை சபை செலவு செய்திருந்த போதிலும் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

நூலகப் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்குரிய கூறுவிலை கோரும் போது கூறுவிலை சமர்ப்பிக்காத நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 85,000 பெறுமதியான நூலகப் புத்தகங்களை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் உள்ளபடியான

செலவினங்களுக்கு இடையே 03 வருமான விடயங்களில் 22 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலும் 05 செலவின விடயங்களில் 29 சதவீதம் முதல் 137 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு புறம்பாக நடவடிக்கைகள் உள்ளகக் கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டிருந்தால் போதியளவு உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ள முடியாமல் இருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான நிருவாகம் | i. நிலுவை வருமான அறவிடப்படாமை |
| | ii. குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடாமை |
| | iii. குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | i. நிதியம் முறைப்படி பயன்படுத்தப்படாமை |
| | ii. சொத்துக்கள் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டமை. |
| (இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | i. சரியாக கணக்கீடு செய்யப்படாமை |
| | ii. கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் முறையான தீர்வுசெய்யப்படாமை |
| (ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு | i. கைதவிர்க்கப்பட வேண்டிய சொத்துக்கள் கைதவிர்ப்புச் செய்யப்படாமை |
| | ii. களஞ்சியத்தில் பற்றாக்குறை காணப்படல் |